**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 12.02.2026

SC. 19/2023

**அ.சா 5 – ரபிக்**

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ம் நாள் **ரபிக்** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **ரபிக்** | தந்தை பெயர் | பாஷா ஜான் |
| வயது | 59 | கிராமம் | மில்லட் நகர் |
| வட்டம் | ஒசூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**( எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**முதல் விசாரணை : –**

நான் தற்போது மில்லட் நகரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2009 ம் வருடம் இரவு 9.00 மணியைபோல் தொழுகை செய்து விட்டு, நாங்கள் அங்கிருந்த போது பூங்காவில் இம்டியாஸை யாரோ காயப்படுத்தி விட்டார்கள் என்று சொன்னார்கள். நான் கேள்விப்பட்டு அங்கு சென்றேன். ஆனால் நான் போவதற்கு முன்பாகவே இம்டியாஸை மருத்துவமனைக்கு கொண்டு சென்று விட்டார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. )**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 22.02.2009 ம் தேதி இரவு 9.00 மணியைபோல் நான் தொழுகை செய்து விட்டு, அங்கிருந்து கடைக்கு சென்றிருந்தபோது பூங்காவில் இருந்து என்னை காப்பாற்றுங்கள் என்று சத்தம் கேட்டது, உடனே நான் அங்கே போனபோது உயரமான ஒரு நபரும், குட்டையான ஒரு நபரும் அங்கிருந்து ஓடியதாதவும், மற்றொரு ஒரு நபர் வாகனத்தை ஸ்டார்ட் செய்து உட்கார்ந்து அவர்கள் அங்கிருந்து கிளம்பி விட்டதாகவும் பின்னர், நான் பூங்காவிற்குள் சென்று பார்த்த போது மில்லட் நகரை சார்ந்த இம்டியாஸ் , பாபுலால், சையத் காதர், முபாரக் ஆகியோர்கள் இருந்ததாகவும், அதில் இம்டியாஸ்க்கு வயிற்றில் பலத்த காயம் பட்டு இரத்தம் வந்து கொண்டிருந்ததாகவும். அது பற்றி அவர்களிடம் கேட்டு தெரிந்து பின்னர், இம்டியாஸை நாங்கள் மருத்துவமனைக்கு கூட்டி சென்று சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், அது சம்மந்தமாக 24.02.2009 ம் தேதி ஹட்கோ போலிசார் என்னை விசாரித்ததாகவும் , போலிசார் விசாரணையில் எதிரிகள் கத்தியுடன் ஓடியதாக பார்த்ததாகவும், காயம் பட்ட நபரை தூக்கி சென்று சேர்த்ததாகவும் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் அவ்வாறே பதிவு செய்யப்படுகிறது.**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur

**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 12.02.2026

SC. 19/2023

**அ.சா 4 – ஜர்கிஅகமத்**

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ம் நாள் **ஜர்கிஅகமத்** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **ஜர்கிஅகமத்** | தந்தை பெயர் | அப்துல் பசிர் |
| வயது | 52 | கிராமம் | மில்லட் நகர் |
| வட்டம் | ஒசூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**( எதிரிகள் ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் )**

**முதல் விசாரணை : –**

நான் தற்போது மில்லட் நகரில் குடியிருந்து வருகிறேன். இம்டியாஸ் என்பவரை யாரோ அடித்து விட்டார்கள் என்று சொன்னார்கள். அதை கேள்விப்பட்டு நான் பார்க்கிற்கு சென்றேன். அங்கு போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். அங்கு போலிசார் என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. தற்போது , பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது ஆகும். என்னுடன் கையெழுத்து போட்ட நபர் இறந்து விட்டார், அவரின் பெயர் முனவர் ஆகும். பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது. )**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 23.02.2009 ம் தேதி காலை 6.00 மணியைபோல் , ஹட்கோ போலிசார் , ஆவளப்பள்ளி ஹட்கோ குடியிருப்பில் உள்ள பூங்காவில் அதற்கு முந்தின தினம் இரவு இம்டியாஸ் என்பவரை 4 நபர்கள் குத்திவிட்டதாகவும், அதனால் அவருக்கு காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும், அது சம்மந்தமாக போலிசார் மேற்படி பூங்காவிற்கு வந்து விசாரித்தார்கள்., அப்போது நானும் , முனவர் என்பவரும் சாட்சியாக இருந்து எங்கள் முன்பாக போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்ததாக, போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து சம்பவம் முழுவதுமாய் கேள்விபடவில்லை என்று கூறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் அவ்வாறே பதிவு செய்யப்படுகிறது.**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur